# தவக்காலம் முதல் வாரம் – செவ்வாய்

**முதல் வாசகம்:**

என் வாக்கு என் விருப்பத்தைச் செயல்படுத்தும்.

**இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம். 55 : 10 – 11**

ஆண்டவர் கூறுவது: மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன. அவை நிலத்தை நனைத்து, முளை அரும்பி வளரச் செய்து, விதைப்பவனுக்கு விதையையும் உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல், அங்குத் திரும்பிச் செல்வதில்லை. அவ்வாறே, என் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும். அது என் விருப்பத்தைச் செயல்படுத்தி, எதற்காக நான் அதை அனுப்பினேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை.

இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.
இறைவா! உமக்கு நன்றி.

**பதிலுரைப்பாடல்:**
**திருப்பாடல்கள்: 34 : 3 – 4, 5 – 6, 15 – 16, 17 – 18 (பல்லவி: 17)**
**பல்லவி: நீதிமான்களை இறைவன் அனைத்து துன்பங்களிலிருந்தும் விடுவிக்கின்றார்.**

1. என்னுடன் ஆண்டவரை பெருமைப்படுத்துங்கள். அவரது பெயரை ஒருமிக்க மேன்மைப்படுத்துவோம். துணை வேண்டி நான் ஆண்டவரை மன்றாடினேன். அவர் எனக்கு மறுமொழி பகர்ந்தார். எல்லா வகையான அச்சத்தினின்றும் அவர் என்னை விடுவித்தார். பல்லவி
2. அவரை நோக்கிப் பார்த்தோர் மகிழ்ச்சியால் மிளிர்ந்தனர். அவர்கள் முகம் அவமானத்திற்கு உள்ளாகவில்லை. இந்த ஏழை கூவியழைத்தான். ஆண்டவர் அவனுக்குச் செவிசாய்த்தார். அவர் எல்லா நெருக்கடியினின்றும் அவனை விடுவித்துக் காத்தார். பல்லவி

3. ஆண்டவர் கண்கள் நீதிமான்களை நோக்குகின்றன. அவர் செவிகள் அவர்களது மன்றாட்டைக் கேட்கின்றன. ஆண்டவரின் முகமோ தீமை செய்வோர்க்கு எதிராக இருக்கின்றது. அவர், அவர்களின் நினைவே உலகில் அற்றுப்போகச் செய்வார். பல்லவி

4. நீதிமான்கள் மன்றாடும்போது, ஆண்டவர் செவிசாய்க்கின்றார். அவர்களை அனைத்து இடுக்கண்ணினின்றும் விடுவிக்கின்றார். உடைந்த உள்ளத்தார்க்கு அருகில் ஆண்டவர் இருக்கின்றார். நைந்த நெஞ்சத்தாரை அவர் காப்பாற்றுகின்றார். பல்லவி

**நற்செய்திக்கு முன் வசனம்:** மத்தேயு **4:b**

மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக,
கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்.

**நற்செய்தி வாசகம்:**

நீங்கள் இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்.

**தூய மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 6 : 7 – 15**

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: “நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது பிற இனத்தவரைப் போலப் பிதற்ற வேண்டாம். மிகுதியான சொற்களை அடுக்கிக்கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என அவர்கள் நினைக்கிறார்கள். நீங்கள் அவர்களைப் போல் இருக்க வேண்டாம். ஏனெனில் நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார்.

ஆகவே, நீங்கள் இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்: “விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயதெனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக! இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல, எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீயோனிடமிருந்து எங்களை விடுவியும். ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமக்கே. ஆமென்.”

மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால், உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார். மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்.

இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
கிறிஸ்துவே உமக்குப் புகழ்.

**சிந்தனை:**

இன்றைக்கு பலருக்கு செபம் செய்யச் சொன்னால் யாரோ எதற்கோ எழுதி அச்சடித்த புத்தகத்தைத் தேடுவார்கள். வேறு சிலர் ஏற்கெனவே பலமுறை பல இடங்களில் சொல்லி பழக்கமானதால், அடுக்கு மொழியில் படு வேகமாக முழங்கிவிடுவார்கள். இன்னும் சிலர், நீங்க உங்களுக்கு ஒரு செபத்தைச் சொல்லுங்கள் என்றால் பக்கத்தில் இருப்பவரை அழைத்து, எனக்காக ஒரு செபம் செய்யுங்கள் என்பார்கள். சிலர் ரொம்ப பெருந்தன்மையுடன், சாமி நீங்களே செபம் செய்யுங்கள் என்று முடித்துவிடுவர். மொத்தத்தில் செபம் செய்வது நம்மவர்களுக்கு தெரியாது, முடியாது.

செபம் செய்யும்போது அடுக்கு மொழிக்காக அலைய வேண்டாம். தாயும் பிள்ளையுமாக பேசுங்கள். அப்பா அம்மா என அழைத்து அன்போடு ஆண்டவனிடம் பேசுங்கள். அன்றைய தினம் நீங்கள் பட்ட இன்ப துன்பங்களை அவரிடம் பகிர்ந்து கொள்ளுங்கள். சந்தித்த நண்பர்கள், பார்த்த காட்சிகள் அதைப்பற்றி பேசுங்கள். அந்த நேரங்களில் உங்களுக்கு தேவைப்படும் உதவியை இறைவனிடம் கேளுங்கள்.

இயேசு கற்றுத்தந்த செபத்தைச் சொல்லும்போதெல்லாம் உங்கள் உள்ளத்தில் எழும் உணர்வுகளை அந்த செபத்தின் இடையே இணைத்துக்கொள்ளுங்கள். அது உங்கள் செபமாக இருக்கும். அந்த செபத்தை இறைவன் விரும்பி கேட்பார். நீங்கள் கேட்பது கிடைக்கும். இப்போதாவது சற்று செபிக்கலாமே.

**********